# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I
# DINDIGUL.

## C.C.No. 476/2019
## Prosecution Witness : 1

**02.02.2024**

**<u>வீரராகவன்</u>**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் ரெடிமேட் துணிகள், கைலி, ஜட்டி, பனியன் விற்கும் வியாபாரம் செய்து வருகிறேன். வியாபாரம் செய்வதற்கு எந்த உரிமமும் தாங்கள் பெறவில்லை என்றால் சரிதான். 2014 லிருந்து கொரோனா காலம் வரை நான் வியாபாரம் செய்திருந்தேன். மொத்த துணிகள் எங்கிருந்து பெறுவீர்கள் என்றால் ஈரோடு மற்றும் திருப்பூரிலிருந்து பெறுவேன். அதற்குரிய ரசீதுகள் எதற்கும் வைத்துள்ளீர்களா என்றால் நான் திங்கட்கிழமை சந்தையில் சென்று வாங்குவதால் ரசீதுகள் எதுவும் இல்லை. தாங்கள் எந்தக் காலத்திலும் ரெடிமேட் துணிகள் விற்கவில்லை என்றால் சரியல்ல. தாங்கள் எந்தெந்த வங்கியில் கணக்குகள் உள்ளது என்றால் கனரா வங்கி மற்றும் ஸ்டேட் பேங்க் வங்கியில் கணக்குள் உள்ளது. 06.08.2018 ல் எனது 2 வங்கிகளிலும் எவ்வளவு தொகை இருக்கும் என்றால் அதிகபட்சமாக 50 ஆயிரத்திலிருந்து ஒரு லட்சம் தொகை இருக்கும். 06.08.2018 ம் தேதிக்கு முன்பு 2 வங்கிகளிலிருந்து எதிரிக்கு பணம் எதுவும் எடுத்துக் கொடுத்தீர்களா என்றால் இல்லை, கையில் இருந்துதான் கொடுத்தேன். எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால், வியாபாரத்திற்கு செல்லும் போது பழக்கம். 06.08.2018 க்கு முன்பு எவ்வளவு காலம் எதிரி பழக்கம் என்றால் ஒரு வருடத்திற்கு முன்பு பழக்கம். ராமராஜபுரத்தில் எதிரியை தவிர யாரையும் தெரியாது என்றால் சரிதான். எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால் கிளர்க்காக உள்ளார். வியாபாரம் செய்யும்போது கடனுக்கு துணிகள் கொடுக்கமாட்டேன் என்றால் சரிதான். கடனுக்கு கொடுத்ததாக சொல்லும் தொகை எவ்வளவு என்றால் 1 1/2 வட்டி ஆகும். எதிரிக்கு கொடுத்த கடன் தொகை ரூ.2 லட்சத்திற்க்கு மாத வட்டி ரூ.3000 ஆகும். எதிரி எந்த மாதமும் வட்டி தரவில்லை. நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தங்களுடைய அறிவுறுத்தலின் பேரில்தான் அறிவிப்பு, புகார், நிரூபண வாக்குமூலம் போடப்பட்டது என்றால் சரிதான். 1 1/2 வட்டிக்கு கொடுத்தேன், பணத்தை திருப்பி தருவதாக என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் வியாபாரத்திற்கு செல்லும் இடத்தில் வேறு யாருக்கும் கடனுக்கு பணம் கொடுக்கவில்லை. குருசாமி பிள்ளை சந்தில் சொந்த வீட்டில் குடியிருக்கிறேன். எதிரிக்கு பணம் கொடுக்கும் போது உடன் யாரும் இருந்தார்களா என்றால் இல்லை. 06.08.2018 ம் தேதி திண்டுக்கலில் உள்ள எனது வீடான குருசாமி பிள்ளை சந்தில் வைத்து நண்பகல் 12.00 மணிக்கு பணம் கொடுத்தேன். அன்றைய தினமே எதிரி காசோலையை கொடுத்தார். 06.08.2018 ம் தேதி என்ன கிழமை என்றால் ஞாபகமில்லை. 06.08.2018 ம் தேதி ராமராஜபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் காலை 10.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை பணியில் இருந்த நிலையில் நண்பகல் 12.00 மணிக்கு வழக்கு காசோலை தொகை வரவுமில்லை, கொடுக்கவுமில்லை என்றால் சரியல்ல. 06.02.2019 ம் தேதிக்கு எதிரியிடம் பணத்தை திருப்பி கேட்டீர்களா என்றால் கேட்டபொழுது ஒரு வாரம் முன்ன பின்ன தருகிறேன் என்று

சொன்னார். காசோலையை நிரப்பியது யார் என்றால் அவரே நிரப்பி கொண்டு வந்தார். காசோலையில் கையெழுத்து வேறு மையினாலும், மற்ற விபரங்கள் வேறு மையினாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோபால்பட்டியை சேர்ந்த சிவகுருநாதன் என்ற கணேசனை தெரியுமா என்றால் எனக்கு சொந்தம், தெரியும். சிவகுருநாதன் என்ற கணேசன் எதிரி மீது உரிமையியல் வழக்கு போட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். சிவகுருநாதன் என்ற கணேசனுக்கும், எதிரிக்கும்தான் வரவு செலவு, என்னை யாரென்றே தெரியாது என்றால் சரியல்ல. சிவகுருநாதன் வசம் உள்ள காசோலையை பொய்யாக நிரப்பி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2018 காலகட்டத்தில் பொருளாதார ரீதியாக எனக்கு தகுதி உள்ளது என்பதை நிரூபிப்பதற்கு ஆவணங்கள் எதையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2018 காலகட்டத்தில் ரூ.2 லட்சம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு எந்தவித அடிப்படை பொருளாதார தகுதி இல்லை என்றால் சரியல்ல. சிவகுருநாதன் என்ற கணேசனின் கருவியாக இருந்து எதிரி மீது தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி சட்டப்படியாக கொடுக்க வேண்டிய கடன் தொகை எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று, எதிரிக்கும், இவ்வழக்கு காசோலைக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA

Digitally signed by V PRIYA
Date: 2024.02.02 16:42:44 +0530

Judicial Magistrate No.I
Dindigul.